வடக்கு.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : *01/2024*

எனது இல: **NP/07/10/07/01**
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
யாழ்ப்பாணம்.
*2024.01.10.*

பிரதம செயலாளர்,
ஆளுநரின் செயலாளர்,
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

## வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் நடாத்தப்படும் வடக்கு மாகாணப் பொதுச்சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள்

வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகத்தால் நடாத்தப்பட்ட வடக்கு மாகாண பொதுச்சேவை உத்தியோகத்தர்களுக்கான சகல வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகளுக்குமான சுற்றறிக்கைகள் யாவும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு வன்பிரதிகளாக அனுப்பி வைக்கப்படும் நடைமுறையானது, கடந்த காலங்களில் வலுவிலிருந்த போதும், நாட்டில் நிலவும் பொருளாதார, நிதி, நெருக்கடி காரணமாக **2022.04.30**ம் திகதிக்குப் பின்னர் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகளிற்கான சுற்றறிக்கைகள் மற்றும் அவற்றுக்கான, திருத்தங்கள் என்பன www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் மாத்திரமே தரவேற்றம் செய்யப்பட்டு விளம்பரப்படுத்தப்படுகின்றது.

இவ்விடயம் பற்றி ஏற்கனவே எமது NP/07/10/02/Gen/2022 இலக்க 2022.04.29ம் திகதிய கடிதம் மூலம் சகல திணைக்களங்களிற்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் இவ் விடயத்தினை தங்கள் திணைக்களங்களின் கீழ்க்கடமையாற்றும் தொடர்புடைய சகல உத்தியோகத்தர்களுக்கும் தெரியப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அதில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களுக்கு பல திணைக்களங்களினால் முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்காமை திணைக்களங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற / முன்னிலைப்படுத்தப்பட்ட பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களின் ஊடாக அவதானிக்கப்பட்டுள்ளது.

உரிய நேரத்தில் பரீட்சைச் சுற்றறிக்கைகள் / அறிவித்தல்கள் / விளம்பரங்கள் பற்றித் தொடர்புடைய திணைக்களங்களிற்கு அறிவிக்கப்படாத நிலை காணப்படுவதால், பல குறைபாடுகள் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களில் காணப்பட்டுள்ளன.

எனவே குறித்த குறைபாடுகளை இல்லாது செய்யும் பொருட்டு, மிகவும் அத்தியாவசியமாகக் கடைப்பிடிக்க வேண்டிய பரீட்சை அறிவுறுத்தல்கள், தொடர்புடைய சகலரதும் தனிப்பட்ட கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றது :-

## *01. வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கான விண்ணப்பங்களை சிபார்சு செய்யும்போது, திணைக்களத் தலைவர்கள், அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் ஆகியோரது பொறுப்புக்கூறல்*

*1.1* **விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்குரிய தரத்தினை உறுதிப்படுத்தல்**

விண்ணப்பதாரி எத்தரத்திற்குரிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு தோற்றுவதற்காக விண்ணப்பிக்கின்றாரோ, விண்ணப்ப முடிவுத் திகதி / அதற்கு முன்பாக நியமன அதிகாரியினால் வழங்கப்பட்ட குறித்த தரத்திற்கான நியமன / பதவியுயர்வுக் கடிதத்தினை பெற்றுள்ளமையையும், அதற்குரிய நியமனத்தினை / பதவியுயர்வினை ஏற்றுக் கொண்டுள்ளமையினையும் ஆவண ரீதியாக உறுதி செய்த பின்னரே **அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் மற்றும் திணைக்களத் தலைவர்** ஆகியோரால் விண்ணப்ப படிவம் சிபாரிசு செய்யப்பட்டு முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும்.

**(எவ்வாறாயினும் எந்தவொரு வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கான சுற்றறிக்கையிலும் இதற்குப் புறம்பான ஏற்பாடுகள் குறிப்பிடப்படுமிடத்து மட்டும் அதன்பொருட்டு பிரத்தியேக கவனம் எடுத்தல் வேண்டும்.)**

**உதாரணம்** :- தரம் II பதவியொன்றின் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டு, குறித்த பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற உத்தியோகத்தர் ஒருவர் ஆவண ரீதியாக தரம் II இற்கு பதவி உயர்வினைப் பெற்றுக் கடமையேற்றுள்ளார் என்பதை நிரூபிக்க முடியாத நிலையில், சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரி பதவியுயர்வுக்குத் தகைமை பெறுகின்றார் அல்லது உரிய காலப்பகுதியை பூர்த்தி செய்கின்றார் அல்லது பதவியுயர்வுக்கு நியமன அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்ற அடிப்படைகளில் விண்ணப்பங்கள் சிபார்சு செய்யப்பட்டு அனுப்பி வைத்தல் **முற்றாக தவிர்க்கப்படல் வேண்டும்.**

*1.2* மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவால் நிராகரிக்கப்படும் விண்ணப்பங்கள் சார்பாக திணைக்களத் தலைவர்களால் / பதவி நிலை உத்தியோகத்தர்களால் தொலைபேசி மூலமோ அல்லது கடிதங்கள் மூலமோ மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகத்திற்கு கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வழமையான அலுவலக செயற்பாட்டிற்கு இடையூறு ஏற்படுத்தப்படுகின்றமை பல்வேறு சந்தர்ப்பங்களில் நடைபெற்றுள்ளது. எனவே நிராகரிக்கப்படும் விண்ணப்பங்களுக்காக **சம்மந்தப்பட்டவர்கள் மட்டுமே** சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தலிற்கு அமைய மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளல் வேண்டும். பரீட்சைக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் ஏனைய தொடர்பாடல்கள் எதிர்காலத்தில் **முற்றிலும் தவிர்க்கப்படல் வேண்டும்.**

*1.3.* **விண்ணப்பங்களில் கோரப்படும் விபரங்களை முழுமையாகவும் சரியாகவும் பூரணப்படுத்துதல்.**

விண்ணப்பதாரிகளால் முழுமையாகவும் சரியாகவும் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டு முன்னளிக்கப்படும் விண்ணப்பங்களில் கீழ்க்கண்டவாறான குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

*1.3.1* விண்ணப்பதாரிகளால் கையொப்பத்திற்கு அருகில் இடப்படும் திகதிக்கும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும் மற்றும் குறித்த விண்ணப்பத்தை சான்றுப்படுத்தும் திணைக்களத் தலைவரால் இடப்படும் திகதிக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றமை / திகதிகள் இடப்படாது வெறுமையாகக் காணப்படுகின்றமை.

1.3.2 கோரப்பட்ட விபரங்கள் முழுமையாகவும் சரியாகவும் பூரணப்படுத்தப்படாமை.

- தொலைபேசி இலக்கங்கள் குறிப்பிடப்படாமை / தவறாகக் குறிப்பிடல்.
- அலுவலக முகவரி குறிப்பிடப்படாமை / தனிப்பட்ட முகவரி குறிப்பிடப்படல்.
- பதவியுயர்வுக் கடித திகதி குறிப்பிடப்படாமை / தவறாகக் குறிப்பிடல்.
- கையொப்பங்களிற்கு அருகே திகதி இடப்படாமை.
- திணைக்களத் தலைவர் / அத்தாட்சிப்படுத்துபவரது பகுதிகள் முழுமையாகப் பூரணப்படுத்தப்படாமை / தவறாகப் பூரணப்படுத்தப்படுகின்றமை.

எனவே, விண்ணப்பங்களை முழுமையாகப் பூரணப்படுத்துவதிலும் அவற்றில் விண்ணப்பதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் உண்மைத் தன்மையை கொண்டுள்ளமையை உறுதிப்படுத்துவதிலும் கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

**1.4 இணையத்தளத்தில் வெளியிடும் பரீட்சைச் சுற்றறிக்கைகள் / அறிவித்தல்கள் / விளம்பரங்கள் பொருத்தமான உத்தியோகத்தர்களுக்கு உரிய காலத்தில் அறிவித்தலும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளலும்.**

பரீட்சைச் சுற்றறிக்கைகள் / அறிவித்தல்கள் / விளம்பரங்கள் தொடர்பில் திணைக்களத் தலைவர்கள் தமக்குக்கீழ் உள்ள அலுவலகங்களில் கடமையாற்றும் பொருத்தமான உத்தியோகத்தர்களுக்கு உரிய காலத்தில் அறிவிக்காத பல சந்தர்ப்பங்கள் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இவ்வாறான நிலைமைகளால் விண்ணப்ப முடிவுத் திகதியைக் கடந்த நிலையில் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுகின்றன அல்லது தகுதியான பல விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்க முடியாத சூழ்நிலையை ஏற்படுகின்றன.

இது ஒருவரின் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் உரிமையினை / பரீட்சைக்குத் தோற்றும் உரிமையினை மறுக்கும் செயற்பாடாகவே கருதக்கூடியதாகும்.

ஒவ்வொரு திணைக்களத் தலைவர்களும் பரீட்சை தொடர்பில் இணையத்தளத்தில் வெளியிடப்படும் பரீட்சைச் சுற்றறிக்கைகள் / அறிவித்தல்கள் / விளம்பரங்களினை உரிய காலப்பகுதியினுள் தமக்குக் கீழேயுள்ள அலுவலகங்களிற்கு வழங்கப்பட்டுள்ளதனை உறுதிப்படுத்துவதோடு அவ்வவ் அலுவலகங்களும் சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதனை உரிய பொருத்தமான நடைமுறைகளினூடாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

இணையத்தளத்தில் வெளியிடப்படும் பரீட்சைச் சுற்றறிக்கைகள் / அறிவித்தல்கள் / விளம்பரங்களில், தங்கள் அமைச்சு / திணைக்களத்திற்குப் பொருத்தமான பரீட்சைச் சுற்றறிக்கைகள் / அறிவித்தல்கள் / விளம்பரங்கள் தொடர்பில் தங்கள் அமைச்சு / திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கு தங்களால் அறிவிக்கப்படுவதற்கு அமைய, குறித்த அலுவலகங்களினால் தங்களுக்கு முன்னிலைப்படுத்தப்படும் விண்ணப்பங்களை, சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்படும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறக் கூடியதாக அனுப்பி வைப்பதோடு, அது குறித்து விண்ணப்பதாரிகளுக்குத் தெரியப்படுத்துதல் என்பவற்றில் அந்தந்த **விடயத்திற்குப் பொறுப்பான அலுவலர்கள், மேற்பார்வை உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள்** ஆகியோர் கவனமெடுத்து செயற்படுதல் வேண்டும்.

விண்ணப்பதாரிகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட காரணமல்லாது, அலுவலக நிர்வாகத்திற்குட்பட்ட தவறு / கவனயீனம் / காலதாமதம் போன்றன காரணமாக காலதாமதமாக, விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்பாக மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பத்தினால் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தியுரிமை இழக்கப்படுதல் தொடர்பில், அக்காலதாமதத்திற்கு காரணமானவர்களே பொறுப்பாளிகள் ஆவர்.

*02. வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகள் தொடர்பான விண்ணப்பதாரிகளது பொறுப்பு*

2.1 சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்படும் வகையில் விண்ணப்பத்தைத் தாமே முழுமையாகவும் சரியாகவும் தெளிவாகவும் பூரணப்படுத்தி அனுப்பி வைத்தல்.

2.2 வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக வெளியிடப்படும் பரீட்சைகள் தொடர்பான சுற்றறிக்கைகள், அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், விளம்பரங்கள் என்பன தொடர்பில் உடன் அறிந்து செயற்பட ஏதுவான தொடர்பாடல் அணுகுமுறைகளை கொண்டிருத்தலும், தம்மால் திணைக்களங்களில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம், விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையை தமது அலுவலகத்தின் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளல்.

2.3 பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெற்றவுடன் உடனடியாக அதனைச் சரிபார்த்துக் அதில் கோரப்பட்டுள்ள தகவல்களைப் பூரணப்படுத்துதல், ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின் அதில் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளல்.

2.4 உரிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை தொடர்பில் தமது சேவைக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பு / ஆட்சேர்ப்புத் திட்டம் / பதவி உயர்வுத் திட்டத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ள தகைமைகளை உரிய காலத்தில் பூரணப்படுத்துதலினை / பூரணப்படுத்தியுள்ளமையினை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

2.5 பரீட்சைச் சுற்றறிக்கைகள் / அறிவித்தல்கள் / விளம்பரங்களில் கூறப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திலெடுத்து அதன்படி பரீட்சைக் கட்டணங்களை முறையாக உரிய காலத்தினுள் செலுத்துதல்.

2.6 பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிடப்படும் பரீட்சைத் திகதியில் குறித்த பரீட்சைக்குத் தோற்றுவதனை உறுதிப்படுத்திக்கொள்ளல். தோற்றமுடியாத நிலைமை ஏற்படின், இச்சுற்றறிக்கை, பரீட்சைச் சுற்றறிக்கைகள் / அறிவித்தல்கள் / விளம்பரங்கள் என்பவற்றில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களினைப் பின்பற்றல்.

*03. வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெற்ற பரீட்சார்த்திகள் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்குத் தோற்றாமை*

வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு திணைக்களங்களால் விடுக்கப்படும் கோரிக்கைகளுக்கு அமைவாக உரிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகள் நடாத்தப்படும் போது,

3.1 விண்ணப்பித்த பரீட்சார்த்திகளில் தகைமை பெற்றவர்களில் பலர் பரீட்சைக்கு தோற்றாதுவிடல், பரீட்சைக்கு தோற்றுபவர்களில் சிலர் விண்ணப்பித்த பாடங்களில் ஒருசில பாடங்களுக்கு மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுதல்.

3.2 மிகக் குறைந்த எண்ணிக்கையிலானோருக்காக (1-3பேர்) ஒழுங்கமைக்கப்படும் பரீட்சைகளுக்கு அவர்கள் தோற்றாமை.

மேற்குறிப்பிடப்பட்ட இரு சந்தர்ப்பங்களுள் 3.2 இல் குறிப்பிடப்பட்ட நிலைமையில், மீளவும் மிகவும் குறைந்த எண்ணிக்கையான பரீட்சார்த்திகளுக்காக பரீட்சை நடாத்த வேண்டிய தேவைப்பாடு ஏற்படுகின்றது. இதனால் மிக அத்தியாவசியமாக நடாத்தப்பட வேண்டிய பரீட்சைகளை நடாத்த முடியாது போதல், ஏற்கனவே திட்டமிடப்பட்ட பரீட்சைகளைப் பிற்போடுதல் போன்ற பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுவதுடன் இவ் இருசந்தர்ப்பங்களினாலும் வீண் செலவினங்கள் ஏற்படுகின்றன. எனவே இவ்விடயத்தில் தொடர்புடைய சகல திணைக்களத் தலைவர்களும் தமது திணைக்களத்தின் கீழ்க் கடமையாற்றும் சகல பரீட்சார்த்திகளுக்கும் முறையான அறிவித்தல் வழங்குதல் வேண்டும்.

## *04.* பரீட்சைக்குத் தோற்ற முடியாமையினை அறிவித்தல்

4.1 பரீட்சைத் தினத்திற்கு முன்னர், இயலாமையுடன் கூடிய பாரிய விபத்து / மருத்துவச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட நோய்நிலைமைகள் காரணமாக பரீட்சைக்குத் தோற்ற முடியாதவர்கள் / தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXVIII பிரிவு 13 இற்கு அமைவான நோய்நிலைமைகளிற்கு உட்பட்டவர்கள், **பரீட்சைத்தினத்திற்கு முன்னரும்,** பரீட்சைத் தினத்தன்று மேற்குறித்த காரணங்களால் பரீட்சைக்கு சமூகமளிக்க முடியாதவர்கள் **பரீட்சைத் தினத்தன்றோ (பரீட்சை முடிவடைவதற்கு முன்னர்) / அதற்கடுத்த வேலை நாளிலோ** பரீட்சைக்குத் தோற்ற இயலாமை குறித்து பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்தின் மூலம் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவிற்குத் தெரியப்படுத்துவதுடன் அது குறித்த எழுத்து மூலமான கோரிக்கையுடன், காரணத்தின் உண்மைத் தன்மையை திணைக்களத் தலைவர் மூலம் உறுதிப்படுத்தி, ஆதாரப்படுத்தும் பொருத்தமான ஆவணங்களுடன் தமது திணைக்களத் தலைவர் ஊடாக செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு பரீட்சைத் தினத்திலிருந்து 7 நாட்களுக்குள் (விடுமுறை நாட்கள் உட்பட) கிடைக்கக் கூடியதாக அறிவித்தல் வேண்டும்.

4.2 **தவிர்க்க முடியாத துக்க நிகழ்வு** அல்லது **சுபநிகழ்வு** போன்றவற்றின் அடிப்படையில் பரீட்சைக்குத் தோற்ற முடியாதவர்களில், ஏற்கனவே திட்டமிடப்பட்ட நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டியவர்கள் பரீட்சைத் தினத்திற்கு 7 நாட்கள் முன்பாகவும், பரீட்சைத் தினத்தன்று துக்க நிகழ்வுகள் காரணமாக பரீட்சைக்கு சமூகமளிக்க முடியாதவர்கள் **பரீட்சைத் தினத்தன்றோ (பரீட்சை முடிவடைவதற்கு முன்னர்) / அதற்கடுத்த வேலை நாளிலோ** பரீட்சைக்குத் தோற்ற இயலாமை குறித்து பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்தின் மூலம் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவிற்குத் தெரியப்படுத்துவதுடன் அது குறித்த எழுத்து மூலமான கோரிக்கையுடன் காரணத்தின் உண்மைத் தன்மையை திணைக்களத் தலைவர் மூலம் உறுதிப்படுத்தி ஆதாரப்படுத்தும் பொருத்தமான ஆவணங்களுடன் தமது திணைக்களத் தலைவர் ஊடாக செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு பரீட்சைத் தினத்திலிருந்து 7 நாட்களுக்குள் (விடுமுறை நாட்கள் உட்பட) கிடைக்கக் கூடியதாக அறிவித்தல் வேண்டும்.

4.3 குறித்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்த முடியாத சந்தர்ப்பங்களின் போது **மட்டும்** exampscnp@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு **பரீட்சைத் தினத்தன்றோ (பரீட்சை முடிவடைவதற்கு முன்னர்) / அதற்கடுத்த வேலை நாளிலோ** மின்னஞ்சலை அனுப்புதல் மூலம் தமது பரீட்சைக்குத் தோற்றமுடியாமை பற்றிக் குறிப்பிடமுடியும். அவ்வாறு மின்னஞ்சல் அனுப்புபவர்கள் தம்மை மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவினால் மீளவும் தொடர்பு கொள்ளக்கூடியவாறான தொலைபேசி இலக்கம் ஒன்றினையும் அம்மின்னஞ்சலில் குறிப்பிடுதல் **கட்டாயமானதாகும்.**

4.4 மேற்குறிப்பிடப்பட்ட இருவழிமுறைகளில் ஏதாவது ஒரு வழிமுறைமூலம் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவிற்குத் தெரியப்படுத்தப்படாத மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட காலப்பகுதிகளின் பின்னர் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறும் கோரிக்கைகள் எவையும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

4.5 பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்றும் பரீட்சைக்குத் தோற்றாதவர்கள் தொடர்பில் அவர்களது அடுத்த தடவைக்கான பரீட்சைக்கட்டணம் இச்சுற்றறிக்கையின் பிரிவு 5இற்கமைய தீர்மானிக்கப்படும்.

***05.* பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்பட்டு பரீட்சைக்குத் தோற்றாதவர்களது அடுத்துவரும் பரீட்சைக்கான பரீட்சைக்கட்டணமானது கௌரவ ஆளுநரின் அனுமதிக்கமைவாக, பின்வரும் வகையில் அமையுமாறு, 2024.01.01ம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வண்ணம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன :-**

5.1 பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்பட்டு குறித்த பரீட்சைக்குத் தோற்றாதவர்களில், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் பரீட்சைக்கட்டணத்தின் **இருமடங்கு பரீட்சைக்கட்டணம் செலுத்துதலிலிருந்து விடுவிக்கப்படாதவர்கள்,** அடுத்த தடவை குறித்த பரீட்சைக்குத் தோற்றும்போது அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக்கட்டணத்தின் இருமடங்கு தொகையை பரீட்சைக்கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும்.

5.2 பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்பட்டு குறித்த பரீட்சைக்குத் தோற்றாதவர்களில், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் பரீட்சைக்கட்டணத்தின் **இருமடங்கு பரீட்சைக்கட்டணம் செலுத்துதலிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள்,** அடுத்த தடவை பரீட்சைக்குத் தோற்றும்போது அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக்கட்டணத்தினை மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் 01/2024 எனும் இலக்க இச்சுற்றறிக்கையை, பின்வரும் வழிமுறைகளிலும் பெற்றுக் கொள்ள முடியும்.

| |
|---|
| 1. www.np.gov.lk எனும் முகவரியில் Exams & Recruitments ⟶ Advertisement |
| 2.www.np.gov.lk எனும் முகவரியில் Circulars ⟶ 7. Provincial Public Service Commission |
| 3.www.np.gov.lk எனும் முகவரியில் ⟶ Notices |

எனவே இச்சுற்றறிக்கையினை தங்களது அமைச்சு / திணைக்களம் / அலுவலகம் /அலுவலகத்தின் கீழ்வரும் சகல உப அலுவலகங்கள் ஆகியவற்றில் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்களதும் கவனத்திற்கு அறியத் தருமாறும், செயற்படுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

**சி.திருவாகரன்,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.

சி.திருவாகரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்
வடமாகாணம்